

திருச்சியில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாளை முன்னிட்டு நடைபெற்ற மௌன அஞ்சலி ஊர்வலத்தில் பங்கேற்றபின் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில் தி.மு.க.வினர் தியாகி சின்னச்சாமியின் கல்லறையில் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். இந்நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் தியாகராஜன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி கதிரவன், இனிகோ இருதயராஜ், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், டோல்கேட் சுப்பிரமணி, சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, வண்டி சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. திருமயம் தொகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில் திருமயம் அண்ணா சீரணி கலையரங்கத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். இதில் கழகத் தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ் தாசன், தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழ் கொண்டான், கழக மருத்துவர் அணி துணை டாக்டர்.ரகு அண்ணாமலை, மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், சீனி. பழனியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், ஆர்.கணேசன் மற்றும் சே. சர்புதீன், ஆர்.எம்.கருப்பையா, கே.ஆர்.ராமசாமி, இராம மேகநாதன், தேவி, சுப. துரைராஜா, ஆர்.எம்.கே.கார்த்திக் ராஜா, சிக்கந்தர், ஜான் பீட்டர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி தொகுதி தி.மு.க. சார்பில்

# அப்பம்பட்டியில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - பூங்கோதை ஆலடி அருணா - தாமரை சிவா சிறப்புரை!

செஞ்சி, ஜன. 27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் செஞ்சி ஒன்றியம் அப்பம்பட்டு கலைஞர் திடலில் நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும். தலைமைச் செயற்குழு உறுப்பினர் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் அனைவரும் வரவேற்றார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும்,மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் துவக்க உரை நிகழ்த்தினார்.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஞானசேகரன், பெனாசிர், ஒன்றிய நிர்வாகிகள் திருமாவளவன்,ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம்,நிர்வாகிகள் கணேசன், பழனி, அன்வர்சயீத், காந்தி, பாலமுருகன், முரளி, சீதாராமன், நாகராஜன், முனுசாமி, சங்கர், சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ,தலைமை கழக பேச்சாளர் உடுமலை தாமரை சிவா ஆகியோர்கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா பேசுகையில்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு தினங்கள் ஜனவரி 25ஆம் நாள் மொழிப்போர் தியாகிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

தமிழ் மொழியை மீட்டு எடுத்ததால் தான் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைத்தது அதனால் தான் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

இந்தியாவில் ஆண்டு கொண்டிருக்கும் பாஜகவான ஒன்றிய அரசு மதத்தை வைத்து அரசியல் செய்கின்றனர். அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் புதுவை உட்பட தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும்.

சமஸ்கிருதம் மொழிக்கு ஒன்றிய அரசு 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.ஆனால் தமிழ்நாட்டுக்கு வெறும் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வழிவகை செய்வார்கள் என பெருமைப்பட தெரிவித்தார்

கூட்டத்தில் ஒன்றிய செய லாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன்,சாந்தி சுப்ரமணியன்,பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், செல்வராஜ், பேரூராட்சிமன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, துணை சேர்மன்கள் ஜெயபாலன், விஜயலட்சுமி முருகன், நகரச் செயலாளர்கள் கார்த்திக், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ராஜலட்சுமி செயல்மணி, மாத்தூர்தாஸ், திலகவதி, கோடீஸ்வரன் , ரவி, அண்ணாதுரை, மணிவண்ணன்,வாசு பழனி செந்தில் பழனி அல்லிமுத்து, சீதாராமன், என்.ஆர். பேட்டை பாலு, ராமு, தொண்டரணி பாஷா,உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.செஞ்சி ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அய்யாதுரை நன்றி கூறினார்.



மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் அரங்கம் தளபதி அரங்கில் மொழிப்போர்த் தியாகிகள் 150 குடும்பத்தாருக்கு நலத்திட்ட உதவிகள் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வழிகாட்டலின் படி வழங்கப்பட்டது. மொழிப்போரில் உயிர் நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் வகையில் மொழிப்போர்த் தியாகிகள் நாளைத் தொடர்ந்து கரூர்பேருந்து நிலையம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட அவைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். மொழிப்போர்த் தியாகி சுப.ராஜகோபால், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாநகரச் செயலாளர் எஸ் பி கனகராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சரவணமூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மகேஸ்வரி, பூவை. ரமேஷ் பாபு, எம் எஸ் கே கருணாநிதி, உள்ளிட்ட ஒன்றிய நகரப் பேரூர் நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை த. பொன்முடி

### சனவரி 27 (2008)



**திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர், தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கித் தலைவர், தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ரூ 7 கோடி மதிப்புள்ள நிலத்தை - அரசுப் பள்ளிக்கு வழங்கிய

# மதுரை ஆயி அம்மாளின் கொடை உள்ளத்துக்கு - முதல்வரின் விருது!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 27-

ரூ.7 கோடி மதிப்புள்ள தனது நிலத்தை தான் படித்த அரசுப் பள்ளிக்கு அளித்த மதுரை ஆயி அம்மாளின் கொடை உள்ளத்துக்கு தகுதியான விருது, தகுதியான விழாவில், தகுதியான முதல்வரால் வழங்கப்படுகிறது என தினத்தந்தி நாளிதழ் 25.1.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.




அத்தலையங்கம் வருமாறு:

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் தனது ‘எக்ஸ்’ சமூக வலைத் தளத்தில் வெளியிட்ட பதிவில், “கல்விதான் உண்மையான அழிவற்ற செல்வம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி ஏழேழு தலைமுறைக்கும் அரணாக அமையும் என்பதை உணர்ந்து, தனது ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தை அரசு பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக கொடையாக அளித்துள்ளார்,

மதுரை யா.கொடிக்குளத்தை சேர்ந்த ஆயி அம்மாள் என்கிற பூரணம் அம்மாள். ஆயி அம்மாளின் கொடையால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்கள். கல்வியையும், கற்பித்தலையும் உயர்ந்த அறமாக மதிக்கும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாக விளங்கும் அவரின் கொடை உள்ளத்தைப் போற்றி பெருமைப்படுத்தும் வகையில், நாளை குடியரசு நாள் விழாவில், அரசின் சார்பில் அவருக்கு முதல்அமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும்” என்று அறிவித்திருந்தார்.

இதைப்படித்தவுடன் எல்லோருக்கும், ‘யார் இந்த பூரணம் அம்மாள்?’ என்ற ஆவல் ஏற்பட்டது. ஏழைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு போட்டாலே அதை விளம்பரப்படுத்தி புகழ்தேடும் சமுதாயத்தில், இவ்வளவு பெரிய நன்கொடையை சத்தமில்லாமல் பூரணம் அம்மாள் வழங்கியுள்ளார். அவருடைய வயது 52. தனது 8 வயதில், முதலில் தந்தையையும், அடுத்து தாயையும் இழந்த அவர், தொடக்கக் கல்வியை யா.கொடிக்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில்தான் படித்தார். 18 வயதிலேயே திருமணமான அவர், 2½ ஆண்டுகளில் கணவரையும் ஒரு விபத்தில் பறிகொடுத்தார். ஒரே மகள் ஜனனியை ஆசை ஆசையாக வளர்த்தார். கணவர் பணியாற்றிய வங்கியில் அவருக்கு கருணை அடிப்படையில் வேலை கிடைத்து, இப்போதும் அந்த வங்கியில் எழுத்தராக பணியை தொடர்கிறார். மகள் ஜனனியை மணமுடித்து கொடுத்த பின், அவரும் மறையவே பூரணம் அம்மாளுக்கு உலகமே இருண்டுபோனது.

அடுத்தடுத்து, குடும்பத்தில் உயிரிழப்புகளை சந்தித்த அவருக்கு, கொடை உள்ளம் மட்டும் மங்கிப்போகவில்லை. தனது தந்தை திருமணச் சீராகக் கொடுத்த ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தின் சந்தை மதிப்பு இப்போது ரூ.7 கோடி என்பதை சற்றும் பொருட்படுத்தாமல், தமிழ்நாடு அரசின் ‘நம்ம ஊரு நம்ம பள்ளி’ திட்டத்தின் கீழ், தான் படித்த யா.கொடிக்குளம் பள்ளிக்கூடத்துக்கு தானப்பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு, சத்தமில்லாமல் வங்கிக்கு வந்து வழக்கமான பணியைப் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட மதுரை எம்.பி. சு.வெங்கடேசன், பூரணம் அம்மாள் பணியாற்றிக் கொண்டிருந்த வங்கிக்கு சென்று பாராட்டியபிறகுதான் வெளியே தெரிந்தது.

கல்விக்காக தானம் செய்வதில் மற்றவருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பூரணம் அம்மாள், 20 ஆண்டுகளுக்கு முன்பே சிறுநீரக பாதிப்பால் அவதிப்பட்ட தன் சகோதரருக்கு தன்னுடைய ஒரு சிறுநீரகத்தையும் தானமாக வழங்கி, உடல் உறுப்பு தானத்திலும் முன்னோடியாக விளங்குகிறார்.

ஏற்கனவே, தான் படித்த அதே பள்ளிக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.9 லட்சம் செலவில் கழிப்பறை குடிநீர் வசதி, மாணவர்களுக்கு நோட்டு எழுதுபொருட்கள் வாங்கிக் கொடுத்துள்ளார். அவரது இந்த கொடை உள்ளத்துக்கு தகுதியான ஒரு விருது, தகுதியான விழாவில், தகுதியான ஒரு முதல்அமைச்சரால் வழங்கப்படுவது சாலப்பொருத்தமுடையதாகும்.

‘இந்த நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக வேண்டும், அதற்கு உயிருடன் இருக்கும் போதே நம்முடைய நிலத்தை கொடுக்கவேண்டும்’ என்று சொன்ன மகள் ஜனனியின் பெயரை சூட்டவேண்டும் என்ற பூரணம் அம்மாளின் ஆசையும், கல்வித்துறையால் பரிசீலித்து நிறைவேற்றப்படவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் பகுதியைச் சேர்ந்த நியூஸ் 7 தொலைக்காட்சி செய்தியாளர் நேச பிரபு அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு கோவை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதை நேரில் சென்று மருத்துவர்களிடம் உடல் நலம் குறித்து கேட்டறிந்து, அவருடைய குடும்பத்தினரை நேரில் சந்தித்து பத்திரிகையாளர்கள் நல வாரியத்தின் சார்பில் ரூ.3.00 இலட்சத்திற்கான காசோலையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கி ஆறுதல் தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மரு.சாமிநாதன், பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.பாலுச்சாமி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்டப் பொறியாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சிற்பி செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ். இளையசூரியன் வரவேற்புரையில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகச் செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வுகளில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் ரகு அண்ணாமலை, ஆ.செந்தில், அரு.வீரமணி, க.மதியழகன், பெ.இராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி, சு.சண்முகம், ஜெயலெட்சுமி தமிழ்செல்வன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராம கிருஷ்ணன் மற்றும் பலர் பங்கேற்றனர்.